## தரம் I இன் பதவிகளுக்கான நியமனம்
## இலங்கை கணக்காளர் சேவை

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் ஏற்பாடுகள் மற்றும் நாடளாவிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தடையற்ற தரஉயர்வினை நடைமுறைப்படுத்துவதன் விளைவாக, தரம் I இன் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, தரம் I இற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை விட அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு நாடளாவிய சேவைகளில் தரம் I இன் பதவிகளுக்கு மிகவும் பொருத்தமான உத்தியோகத்தர்களிடையே நியாயமான மற்றும் வெளிப்படையான தெரிவுக்கான ஏற்பாடுகள், 11.10.2023 ஆம் திகதிய பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 04/2023 மூலம் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

02. அதன்படி, இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இன் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கு பொருத்தமான உத்தியோகத்தர்களின் தெரிவு, 16.10.2023 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மேற்படி சுற்றறிக்கையின் இடைக்கால ஏற்பாடுகளுக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றது.

03. விண்ணப்பித்தல்

3.1 இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இன் 31.12.2024 ஆம் திகதி வரையில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு 16.10.2023 ஆம் திகதியாகும்போது தரம் I இன் பதவியை வகிக்காத இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இன் அனைத்து தரம் I உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

3.2 விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள், இணைப்பு I விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் கொழும்பு 07, சுதந்திர சதுக்கம், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு 2024.02.16 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமனம்செய்தல்" என்று குறிப்பிட வேண்டும்

3.3 அத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதோடு தவறுதலாக மற்றும் குறையாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. நேர்முகப்பரீட்சை நடத்துதல்:

4.1 மேலே 3.1 இன் படி தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் 11.10.2023 ஆம் திகதிய பொதுச்சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 04/2023 இன் ஏற்பாடுகளின்டி நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதோடு அந்த நேர்முகப்பரீட்சையில் பின்வரும் பிரிவுகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்

| தலைப்பு | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|
| 01. பிரதான/ மையப்படுத்தப்பட்ட திறன்கள் | 500 |
| 02. அனுபவம் | 400 |
| 03. மொழித் திறன் | 100 |
| மொத்த புள்ளிகள் | 1000 |

4.2 பொது சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 04/2023 இன் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்காணல் நடத்தப்பட்டு திறமை நிச்சயிக்கப்படும்.

05. பதவிக்கு நியமனம் செய்தல்:

5.1 நேர்முகப்பரீட்சை இடம்பெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், உண்மையில் ஏற்பட்ட வெற்றிடங்கள் மற்றும் 31.12.2024 ஆம் திகதிவரை எற்படும் என எதிர்வு கூறப்படுகின்ற வெற்றிடங்களின் பட்டியல், பொது நிர்வாக அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்படுவதோடு விண்ணபதாரர்களால் நேர்முகப்பரீட்சைக்கு வருகை தரும் சந்தர்ப்பத்தில் தங்கள் விருப்பம், வரிசை ஒழுங்கில் குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களின் பட்டியலை நேர்முகப்பரீட்சைக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.

திகதி : 2024.01.12

ஒப்பம்/. பிரதீப் யசரத்னா
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**இணைப்பு I**

**இலங்கை கணக்காளர் சேவை தரம் I இன் உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமிப்பதற்கான விண்ணப்பம்**

அலுவலக உபயோகத்துக்கு

விண்ணப்ப இலக்கம் | F |

**(அ) பகுதி - உத்தியோகத்தரால் பூரணப்படுத்தப்பட வேண்டும்**

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :……………………………..............செல்வி/ திருமதி/திரு

   1.2 முழுப்பெயர் :…………………...............................................................செல்வி/ திருமதி/திரு

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :……………………………………………………….

3. பிறந்த திகதி :…………………………………………………………….....................................

4. சொந்த முகவரி :…………………………………………………………….......................

5. தொலைபேசி இலக்கம் 5.1 வீட்டு:……………………5.2 கையடக்க:…………………………

6. மின்னஞ்சல் முகவரி :………………………………………………………………......................

7. தற்போது வகிக்கும் பதவி :……………………………………………………………...........

8. அமைச்சு/ திணைக்களம் :……………………………………….............................................

9. காரியாலய முகவரி :………………………………………………………………..................

10. 10.1 காரியாலய தொலைபேசி இலக்கம் :……………………………………………………......

    10.2 காரியாலய தொலை நகல் இலக்கம்:………………………………………………......

11. இலங்கை கணக்காளர் சேவைக்கு நியமனம் பெறும் திகதியிலிருந்து விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி வரை சேவை புரியும் சேவை நிலையம் (கடமையைப் பொறுப்பேற்ற கடிதங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்)

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

12. இ.க.சே. I ஆம் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்ட திகதி ……………………………………………

(I ஆம் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்க வேண்டும்.)

13. ஒழுக்காற்று நடவடிக்கைகள் :

13.1 கடந்த சேவைக் காலத்தினுள் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு உட்பட்டுள்ளீரா? ஆம்/ இல்லை

13.2 13.1 இற்கான பதில் 'ஆம்' எனின் ஒழுக்காற்றுக் கட்டளைக் கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதியைக் குறிப்பிடவும்.

இலக்கம் : ………………………………. திகதி : …………………………………….

**குறிப்பு-பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்**

மேலே இலக்கம் 01 தொடக்கம் 13 வரையிலான தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: .................................... ……………………………..

விண்ணப்பதாரரின் கையொப்பம்
பதவிப்பெயர்

**(ஆ) பகுதி – திணைக்களத் தலைவரால் பூரணப்படுத்தப்படவேண்டும்.**

செயலாளர்,…………………………………………………………………………….... அமைச்சு

1. உத்தியோகத்தர் தொடர்பில் இதுவரை ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டு/ ஒழுக்காற்று விசாரணை நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது/ இல்லை.............................................

   1.1 மேற்படி பதில் 'இருக்கின்றது' எனின் அதன் தற்போதைய நிலை :

   ……………………………………………..........................................................................
2. மேலே 11 தொடக்கம் 13 வரையிலான விடயங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்.
3. உத்தியோகத்தரது விண்ணப்பத்தை பரிந்துரைக்கிறேன்/ பரிந்துரைக்கவில்லை

திகதி : ………………………………… ………………………………

திணைக்கள/நிறுவனத்
தலைவரின் கையொப்பம்
பதவிப்பெயர் மற்றும்
உத்தியோபூர்வ முத்திரை

**குறிப்பு-பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்**

**(இ) பகுதி - குறித்த அமைச்சின்செயலாளர் / மாகாண தலைமைச் செயலாளரால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.**

செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

1. இலங்கை கணக்காளர்சேவையின் தரம் I இன் ....................................................... திரு/ திருமதி/செல்வி இலங்கை கணக்காளர்சேவையின் தரம் I இன் பதவிக்கு நியமனம் செய்ய பரிந்துரைக்கிறேன்/ பரிந்துரைக்கவில்லை*

( * பரிந்துரைக்கவில்லை எனின், காரணத்தினை சுருக்கமாகக் குறிப்பிடவும்.)

..............................................................................................................................................

திகதி :....................................

...................................
செயலாளர்,
.....................................................
................................. அமைச்சின்
உத்தியோகபூர்வ முத்திரை

**குறிப்பு-பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்**